## தலைப்பு 294 - தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய வருமானத் தலைப்பிற்கு பதிலாக சேர்க்கப்பட்ட வருமானம் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 27,882,779 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 45,791,580 ஆக ரூபா 17,908,801 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய வருமான தலைப்புக்களில் வருமானம் தனியாக செலவினத் தலைப்புக்களில் வருமானம் குறைப்பட்ட பின்னர் தேறிய வருமானமாக எடுக்கப்படாமையினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று திணைக் களப் புத்தகங்களின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 134,768 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 18,043,570 ஆக ரூபா 17,908,802 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 134,768 மீதி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய இடர் கடன், மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து மாற்றல் பத்திரம் தயாரித்து அறவிடப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 535,661,619 மற்றும் மூலனச் செலவினம் ரூபா 143,682,697 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 532,181,969 ஆகவும், ரூபா 147,162,347 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 3,479,650 வீதம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் குறைத்தும் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் உருவான காசுப்பாய்ச்சல் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 3,479,650 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை மீள அறவிடல், வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக அந்த கால எல்லைக்குரியதாக செலுத்தப்பட்ட சம்பளத்தை மீண்டும் அறவிடப்பட்ட பணமாகும். | காசுப்பாய்ச்சல் கூற்று திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி (ரூபா) | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள் | 2,568,817 | மரணமடைந்த 08 உத்தியோகத்தர்களிட மிருந்து ரூபா 478,872 தொகை, சேவையைச் விட்டுச் சென்ற 19 உத்தியோகத்தர்களிடமி ருந்து ரூபா 724,136 தொகை மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 19 உத்தியோகத்தர்களி டமிருந்து ரூபா 1,365,809 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,568,817 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 1,077,431 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாகக் காணப்படுகின்ற மீதியாகும். | மரணமடைந்த உத்தியோகத்தரின் உரிமையாளர்களிடமி ருந்து நிலுவை கடன் மீதி தொடர்பாக அறிவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் பதிலளிக்கப்படவில்லை ல. 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | நிலுவைக் கடன் மீதியை இனங்கண்டு தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத் தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விரைவாக அறவிடுவதற்கு நடிவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

உயிரின இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு தேசிய மிருகக்காட்சி திணைக்களத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் அந்த நோக்கங்கள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கைக்கு உரிய மற்றும் அருகிச் செல்லும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ள விலங்கு களை விஷேடமாக பாதுகாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பின்னவல மிருகக்காட்சி சாலையில் தற்போது | கரடி அரணில் அமைந்துள்ள ஆண் கரடிக்குப் பொருத்தமான பெண் கரடி பெற்றுக் கொள்வதற்காக வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்த போதும் நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் | மிருகக்காட்சிசாலை ஆரம்பிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கின்ற 26 விஷேட விலங்கினங்களில் இலங்கைக்கு உரிய 03 விஷேட விலங்கினங்களுக்கு உரிய 10 விலங்குகள் மாத்திரம் இருந்ததுடன் அதில் இருந்து ஆண் மற்றும் பெண் கரடிகள் இரண்டும் மற்றும் இலங்கைக்குரிய 05 சிறுத்தைகளுக்கு இடையே காணப்படுகின்ற வயது வேறுபாடுகளுடன் இணங்காமையின் காரணமாக அது குட்டிகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை . | காரணமாக பொருத்தமான வயது எல்லையில் காணப்படுகின்ற கரடிகள் வனத்தில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. விலங்கின இனப்பொருக்கத்திற்காக பொருத்தமான வயதில் சிறுத்தைகள் பின்னவல மிருகக்காட்சி சாலையில் இருந்த போதிலும் அவைகள் இயற்கையான இனப்பெருக்கத்தின் மூலம் குட்டிகளை இனப்பெருக்கம் செய்ய முடியாமையினால் செயற்கை கருத்தரித்தல் மூலம் சிறுத்தைகளை இனப்பெருக்கம் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமொன்றாக செயற்படும் பின்னவல மிருகக்காட்சி சாலையில் ஏற்படுத்தும் ஒரு நோக்கமாக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த மிருகக்காட்சி சாலையில் ஆராட்சி நிலையமொன்று நிர்மாணித்து ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றமை அவதானிக்கப்படவில்லை. | தற்போது சிறுத்தைகள் இயற்கையாக இனப் பெருக்கம் செய்ய முடியாமையினால் செயற்கை கருக்கட்டல் மூலம் விலங்கினங்களை இனப்பெருக்கும் செய்வதற்கான ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மிருகக் காட்சிசாலை ஆரம்பிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரே ஒரு சபாரி பூங்காவான ரிதியகம சபாரி பூங்கா ஆரம்பிக்கப்பட்டு 08 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதும் அந்த பூங்காவை செயற்படுத்துவதற்கு உரிய குறித்துரைத்த வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | வழிகாட்டிக் கோவையைத் தயாரிப்பதற்கான அடிப்படை விடயங்கள் மேற் கொள்ளப்பட்டதுடன் அதன் மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடி 02 தடவைகளில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | பூங்காவினை செயற்படுத்துவதற் குரிய வழிகாட்டி ஒன்றை விரைவாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபாரி பூங்காவில் 2023 திசம்பர் 31 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அதில் இருக்கின்ற 60 விஷேட வகைக்குரிய 1,247 விலங்கினங்களுக்கு இடையே 112 விலங்குகளின் ஆண் பெண் தன்மை இனங்காணப்படாமை, 529 உயிரினங்களில் நட்சத்திர ஆமைகள் போன்ற விடயங்களின் பிரகாரம் கணிசமான வண்ணமயமான மற்றும் கவர்ச்சி கரமாக இருக்க வேண்டிய உயிரினங்கள் போதியளவு காணப்படாமை, கவர்ச்சிகரமான சூழல் மற்றும் உரிய விளம்பரம் காணப்படாமையால் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது. | ஆண் பெண் தன்மையை இனங்காண முடியாத பறவைகள் தொடர்பாக உரிய விடயம் தொடர்பான அறிவுள்ளவரை ஈடுபடுத்தி அந்த நிலைமையைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை விலங்கினங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அந்த நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டமையால் தற்போது கிடைக்கப் பெற்ற விலங்கினங்கள் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. | மிருகக்காட்சி சாலையில் கவர்ச்சிகரமான விலங்கினங்களை அதிகரித்து கவர்ச்சிகரமான சூழல் ஒன்றை ஏற்படுத்தி வருகை தருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ரூபா 11 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 04 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | புதிய செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக போதியளவான நிதி ஏற்பாடு மத்திய அரசாங்கத்தில் இருந்து கிடைக்கப்பெறாதிருந்தமையால் அத்தியவசியப் பணிகளை நிறைவேற்றுவதற்காக முன்னுரிமை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவைகளை இனங்கண்டு உரிய திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையே செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் புறக்கணிப்புக்களின் போது திட்டமிடல்களைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பொழுதுபோக்கு நிலையமொன்றாக செயற்படுத்துதல் மற்றும் சுற்றுலா வியாபாரத்தை ஊக்குவிக்கும் என்ற நோக்கில் நிறைவேற்றுவதற்காக பின்னவல மிருகக்காட்சி சாலையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட 11 வலயங்களுக்கிடையே சுற்றுலாப் பிரயாணிகளின் கவர்ச்சினை அதிகரித்துக்கொள்வதற்கா க மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரிவான மீன்கூடம் மற்றும் சிறுவர் சிறிய பிள்ளைகளுக்கான நீர் விளையாட்டு பூங்காவை நிர்மாணிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியினால் கிடைக்கின் நிதி ஏற்பாடு வரையறுக்கப்பட்டமையால் அரசாங்கத்தின் மூலம் பெறப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மீன்கூடம் நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பதற்காக மிகவும் அதிக கிரயமொன்றைச் செலவிட வேண்டியிருந்ததை அறியத்தருகின்றோம். | சுற்றுலா வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| பின்னவல யானைகள் சரணாலயத்தில் மோதரவத்த காணியில் வேலி அமைத்தல் மற்றும் நுழைவு வீதியை அமைப்பதற்காக ரூபா 2.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 20 சதவீதமாக காணப்பட்டது. | செயற்திட்டத்திற்குரிய மதிப்பீடுகள் தயாரித்து பெறுகை நடைமுறையின் கீழ் தேவையான கட்டிடப்பொருட்கள் பின்னவல யானைகள் சரணாலயத்தின் பிரதான களஞ்சியம் ஊடாக நிர்மாணிக்கும் காணிக்கு கிடைத்திருந்ததுடன் அந்த கொள்வனவுகளுக்காக பட்டியல்களைத் தீர்த்தல் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டை செயற் திறனாகவும் வினைத்திறனாகவு ம் பயன்படுத்தி திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கை ள பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தால் தேசிய இயந்திர உபகரண நிறுவனத் துடன் கூட்டுமொத்தமாக ரூபா 176,281,496 ஆன 06 நிர்மாண செயற்திட்டங்களுக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி அந்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பெறுகைக் குழு தீர்மானத்தின் பிரகாரம் அந்த செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்த (Terminate) போதிலும் செயற்திட்டத்தை மீண்டும் புதிய ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை யின் காரணமாக அந்த நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 69,558,270 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. அதில் 04 செயற்திட்டங்களுக்காக தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையில் நிறுத்திவைத்தல் பணம் சீராக்கப்பட்ட பின்னர் ரூபா 14,360,310 தொகை மேலும் அறவிட வேண்டி இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. | இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள இந்த நிர்மாணங்களுக்காக வேறு முறைமையொன்றின் மூலம் பூர்த்தி செய்து ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 215,891,993 செலவில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட ரிதியகம சபாரி பூங்காவின் 10 நிர்மாணங்களில் 06 நிர்மாணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு | இதில் அமைந்துள்ள விற்பனை நிலையத்திற்காக கூறுவிலை கோரப்பட்ட போதிலும் எந்தவொரு நபரேனும் கூறுவிலை சமர்ப்பித்திருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு அத்தியவசிய பராமரிப்பு செயற்திட்டங்களுக்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட்ட மையால் அந்த வலயத்திற்குரிய ஏனைய | இந்த சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் இந்த நிர்மாணமும் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | 500 ஏக்கர் அளவிலான பரப்பளவையுடைய ரிதியகம சபாரி பூங்காவில் 150 ஏக்கர் நில அளவு ஒன்று ஆரம்பத்திலிருந்து பூங்காவிற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 – 2022 காலப்பகுதியின் போது நிதி ஏற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் நிர்மாணங்கள் தாமதமாக இருந்ததுடன் இதுவரையில் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பூங்காவின் நிலப் பிரதேசங்களை ஆக்கபூர்வமானதா க பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | பின்னவல மிருகக்காட்சி சாலையில் சுற்றுலாப் பிரயாணங்களை இலகுவாக வழங்குவதற்காக 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 5,449,764 செலவினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட BUGGY வண்டிகள் 10 இல் 07 உம் 2024 மே 22 ஆம் திகதி வரையில் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | பின்னவல மிருகக்காட்சி சாலையில் 03 பக்கி வண்டிகள் பழுதுபார்த்து சுற்றுலாப் பிரயாணிகளின் பயணத்தை இலகுபடுத்து வதற்காக பயன்படுத்தப்பட்டதுடன் எஞ்சிய வண்டிகள் பழுதுபார்ப்பதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பக்கி வண்டிகளைப் பழுதுபார்த்து ஆக்க பூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானை பட்டிகளைச் சுத்தப்படுத்துகின்ற கழிவு நீர் சுத்திகரிக்கும் இயந்திரக் கூடம் 2020 ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் செயலிழந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய | கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஊழியர் வருகை குறைந்தமையினால் கழிவு நீர் சுத்திகரிப்பு அலகு உரிய பிரகாரம் பராமரிக்கப் படாதிருந்ததுடன் நிர்மாணங்களில் காணப்பட்ட நலிவுகளின் காரணமாக சுத்திகரிகும் அலகு செயலிழந்த நிலைக்கு உட்பட்டிருந்தது. தற்போது 03 | நீர் சுத்திகரிக்கும் இயந்திரக்கூடத்தை சிறந்த நிலைகத்கு கொண்டுவந்து சுற்றாடல் மாசுறுதலைக் குறைக்கும் வகையில் கழிவு நீர் அகற்றுவதற்கு தேவையான |

| | | |
|---|---|---|
| சுற்றாடல் சட்டத்தின் 23(அ) மற்றும் 23(ஆ) பிரிவுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் சுத்திகரிப்படாத அசுத்தமான நீர் தினந்தோறும் மாஓயாவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | கட்டங்களின் கீழ் இந்த முறைமையை சிறந்த நிலைக்கு கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இந்த அலகை 2024 ஆம் ஆண்டில் மூன்றாவது காலாண்டு முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரிதியகம சபாரி பூங்காவில் சுற்றுலாப் பிரயாணிகளின் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படு கின்ற பேரூந்து வண்டிக்காக எரிபொருள் லீற்றர் 01 இல் கிலோ மீற்றர் 4.2 ஓடக்கூடியதாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் எரிபொருள் சமப்படுத்தும் போது 2023 பெப்ரவரி வரை லீற்றர் கிலோ மீற்றர் 1.16 ஆகவும் 2023 மார்ச் முதல் கிலோ மீற்றர் 2.1 ஆகவும் சமப்படுத்தப்பட்டமையால் சனவரி முதல் ஒக்டோபர் வரை 03 பேரூந்து வண்டிகளுக்காக எரிபொருள் கிரயம் ரூபா 7,063,875 ஆகக் காணப்பட்டதுடன் அதில் சரியான கிரயத்திற்கு அண்ணளவான ரூபா 3,289,613 ஆனமையால் ரூபா 3,774,262 தொகை மேலதிக செலவினம் செய்யப்பட்டிருநத்து. மேலும் இந்த 03 பேரூந்து வண்டிகளில் 2023 யூலை முதல் ஒக்டோபர் வரை ஓட்டக்குறிப்புக்களில் காண்பிக்கப்பட்ட தூரம் மற்றும் பாதுகாப்பு பிரிவு பயன்படுத்திய அறிக்கைகளின் தூரத்திற்கு இடையே 2,190 கிலோ மீற்றர் | பூங்காவில் உயிரினங்கள் சுற்றித்திரிகின்றமையினால் மோட்டார் வாகனங்களை மணித்தியாலயத்திற்கு கிலோ மீற்றர் 10-15 வரை வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் பூங்காவில் அதிக எரிபொருள் நுகர்வுடன் 01 மற்றும் 02 கியர்களில் மாத்திரம் வாகனம் ஓட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் எரிபொருள் சமப்படுத்தும் போது சபாரிப் பூங்காவில் உள்ளக ரீதியில் 1. 2 கியர்களில் கிலோ மீற்றர் 70-80 அளவு மற்றும் பிரதான வீதியில் 3, 4 கியர்களில் கிலோ மீற்றர் 20 தூரம் ஓடியிருந்தது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விளைவுகள் மற்றும் எரிபொருள் பெற்றுக்கொள்ளல் 02 தடவைகளுக்கிடையே ஓடப்பட்டிருந்த தூர அளவைக் கவனத்திற் கொண்டு லீற்றருக்கு 2.1km ஆக எரிபொருள் எரிவு சமப்படுத்தப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே கணக்காய்வினால் அறிவிக்கப்பட்ட பிரகாரம் எரிபொருள் பரிசோதனையொன்று மீண்டும் | எரிபொருள் சமப்படுத்துதல் சரியாக மேற்கொண்டு வாகனங்களுக்கா க எரிபொருள் பயன்பாட்டை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுட ன் வாகனக் கட்டுப்பாட்டில் உள்ளக கட்டுப்பாடை வலுப்படுத்துவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேறுபாடு காணப்பட்டது. | மேற்கொள்ளப்பட்டதுடன் அது NC 8255 மற்றும் NC 8256 இற்காக லீற்றர் ஒன்றுக்கு கிலோ மீற்றர் 2.3 வீதமும் NC 8256 இற்காக லீற்றர் ஒன்றுக்கு கிலோ மீற்றர் 2 உம் ஆகும்.<br><br>பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களின் ஆவணங்களில் குறிப்பிடும் போது தவறொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஓட்டக் குறிப்புக்களில் சரியான பதிவுகள் இடப்பட்டுள்ளது. | |

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் தெஹிவள மிருகக்காட்சிசாலை பார்வையிடுவதற்காக 1,288,749 பேரும் பின்னவல யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்காக 567,426 பேரும் ஆக போதியளவான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை வருகை தந்திருக்கும் போது இலங்கையில் ஒரே ஒரு சபாரிப்பூங்காவான ரிதியகம சபாரி பூங்கா மற்றும் இலங்கையின் ஒரே ஒரு திறந்த வெளி மிருகக்காட்சி சாலைக்காக வருகை தருகின்ற சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை முறையே 227,076 மற்றும் 277,865 ஆக இருந்தது. போதியளவான மற்றும் பல்வேறு வகையான சொத்துக்களின் எண்ணிக்கை, கவர்ச்சிகரமான சூழல் மற்றும் உரிய | 2019 முதல் 2022 வரை நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாகவும் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டின் காரணமாகவும் புதிய விலங்கினங்களை இறக்குமதி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் விலங்கினங்கள் பரிமாற்றல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் உள்நாட்டு ரீதியில் கருப்பு வாத்துக்கள் மற்றும் செம்மறி ஆடுகள் 2024 ஆம் ஆண்டின் போது சபாரிப் பூங்காவிற்கு பெறப்பட்டிருந்தது. மேலும் வெளிநாட்டு உயிரினங்கள் பரிமாற்றலின் கீழ் ரஷ்யா மற்றும் இந்தியா என்ற நாடுகளிலிருந்து விலங்கினங்களை பெற்றுக்கொள்ளல் தற்போது | சுற்றுலாத்துறையினைக் கவர்ச்சிகரமாக அபிவிருத்தி செய்யும் வகையில் பின்னவல மிருகக்காட்சிசாலை மற்றும் ரிதியகம சபாரிப் பூங்கா தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விளம்பரப்படுத்தல் காணப்படாமை அதற்கான காரணமாக இருந்தது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) ரிதியகம சபாரிப் பூங்காவில் 2023 ஆம் ஆண்டின் யூன் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வங்காள புலியின் மரணப்பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அந்த புலி விசமடைந்த உடலுடன் மரணத்திற்கு உட்பட்டிருந்ததுடன் சபாரிப் பூங்காவின் பாதுகாப்பில் இருக்கின்ற விலங்கினம் ஒன்று இயற்கை அல்லாத வகையில் மரணத்திற்கு முகங்கொடுத்தமை தொடர்பான விசாரணைகள் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. | வங்காளப் புலியின் மரணம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த விலங்கினத்தின் உடல் மாதிரிகள் தொடர்பாக இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை இதுவரை கிடைக்காமையின் அடிப்படையில் பரிசோதனையின் இறுதி அறிக்கை தாமதமடைந்துள்ளது. | விரைவாக விசாரணை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் 2023 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 896 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 175 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 11 பதவிகளும், இரண்டாம் நிலையில் 38 பதவிகள் மற்றும் ஆரம்பநிலையில் 126 பதவிகளும் உள்ளடங்கி இருந்தது. | கால்நடை மருத்துவர் மூன்று பேர்களை சேர்ப்பதற்காக வரிசை அமைச்சு ஊடாக விவசாயத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்கள் 3 பேர்களைச் சேர்ப்பதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>இரண்டாம் நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக செயலாளர், அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்கின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரிதியகம சபாரிப் பூங்காவில் விலங்கினங்களின் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக் கப்பட்ட பதவியணியினர் பட்டியலில் மிருக வைத்தியர் மூன்று பேர் தேவையாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒரு மிருக வைத்தியர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | ஒப்பந்த அடிப்படையில் மிருக வைத்தியர்களை சேர்த்தல் தொடர்பாக வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பி திணைக்களத்தின் நடவடிக்கைகளை சரியான வகையில் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |